REGD. No. M. 6311

PHONE No.: 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 294

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: வைகாசி 11உ திங்கள் (24—5—54) ★ ★ ★ வெளியூர்: வைகாசி 12உ செவ்வாய் (25—5—54)

வெற்றி பெற்றோம்-இரண்டாம் முறை!

கல்வித் திட்டம் கொண்ட பலி கொஞ்சமல்ல!

தி. மு. க. காட்டிய ஆற்றலை நாடு அறியும்

ஆணவம் அழிந்த கதையைப் பற்றி விளக்கம்

திருவள்ளூரில் அண்ணாதுரை

"ஆச்சாரியார் கவர்னராயிருந்திருக்கலாம்; கவர்னர்-ஜெனரலாய் உயர்த்தப்பட்டிருக்கலாம்; பகவத் கீதை பயின்றவராயிருக்கலாம்; வேத உபநிஷத்களுக்கு உரை எழுதியவராயிருக்கலாம்; அறிவாளி எனப் பாராட்டப்படலாம்; சிவஞானங்களால் சீராட்டப்படலாம்;—என்றாலும் எங்களிடம்—திராவிட இயக்கத்தவரிடம் அந்த ஆணவம் மிகுந்த வர்ணாசிரமத் தலைவன்—ஆச்சாரியார்—தோற்றார்—ஒரு முறையல்ல—இரு முறை!"

"1938-ம் ஆண்டில் இதே ஆச்சாரியார் ஆட்சிப் பீடத்தில் இருந்தபோது, இந்த நாட்டு மக்களை—அவர்களின் எண்ணங்களை மதியாது, இந்தியைக் கட்டாய பாடமாக்கினார்; நாம் எதிர்த்தோம் அன்று! ஆயிரக்கணக்கானவர்—வாலிபர்கள், வயோதிகர்கள், மாணவர்கள், தாய்மார்கள்—எல்லோருமே சிறைப்பட்டோம்; அதற்கும் மேலாக, தாளமுத்து, நடராசன் என்ற இரு கழகக் காளையரைப் பலியாகத் தந்தோம்—அந்த நாட்களில் எல்லாம் நாங்கள் இரு கழகங்களாகப் பிரிந்திராது, ஒன்றாக இருந்த பொன்னான காலம்—அப்போது போரிட்டோம்; வெற்றியும் பெற்றோம்; அன்று இந்தி 'வாபஸ்' வாங்கப்பட்டது. ஆச்சாரியார் தோற்றோடினார்.

"இன்றும்—10 ஆண்டுகளுக்குப் பின்பு—மீண்டும் ஆச்சாரியார் தோற்றிருக்கிறார் நம்மிடம்! அன்று வெறும் ஆச்சாரியார்—இன்று சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்! அன்று வெறும் மந்திரி ஆச்சாரியார்—இன்று கவர்னர், கவர்னர்-ஜெனரல் ஆகிய பதவிகளை வகித்து பெருமை பெற்றிருக்கிற ஆச்சாரியார்!! அவர்தான் தோற்றார்—இந்த நாட்டவரிடம் - திராவிடரிடம்—ஒருமுறையல்ல இருமுறைகள்!

"அந்த மனிதரின் ஆணவம்தான் என்ன சாதாரணமானதா? இட்லரைப் போன்றவர் ஆச்சாரியார்—இட்லருக்கு இருந்த படை பலம் இல்லாவிட்டாலும் அவனுக்கு இருந்த ஆணவ உள்ளம் கொண்டவர் ஆச்சாரியார்! ஜார் மன்னனுக்கு ஒப்பானவர் ஆச்சாரியார்—அவனுக்கு இருந்த அந்தஸ்தும், அரண்மனை வாழ்வும் இல்லாவிட்டாலும் அவனது வெறி உள்ளம் கொண்டவர் ஆச்சாரியார்!!

"அந்த ஆச்சாரியார், இனியும் என்றாவது இந்த நாட்டின் அரசியலில் தலையிட்டு, திராவிடரை வம்புக்கு இழுத்தால், அன்றும் நாம் அந்த ஆணவக்காரரை மூன்றாம் முறையாகத் தோற்கடிக்கத் தயங்க மாட்டோம்."

—இவ்வாறு தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் திருவள்ளூரில் நடைபெற்ற கல்வித் திட்ட வெற்றிவிழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆச்சாரியார் கல்வித் திட்ட ஒழிப்பு குறித்து வெற்றி விழா, திருவள்ளூர் கிராமணியார் சத்திரத்தின் பெருமண்டபத்திலே 23-ந் தேதி மாலை 7 மணிக்கு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மண்டபத்துக்கு உள்ளேயும், எதிர்ப்புறமிருந்த குளத்து மேட்டிலும் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். கூட்டத்திற்கு தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமை வகித்தார்.

தோழர் அண்ணாதுரை அவர்கள் தொடர்ந்து பேசியதாவது:—

"இந்தக் கல்வித் திட்டத்தை எதிர்த்த எல்லோருக்குமே இந்த வெற்றியில் பங்கு உண்டு. கல்வித் திட்டத்தைக் கைவிட்டதற்காக காமராஜரைப் பாராட்டுகிறோம்—மக்களின் எண்ணங்களுக்கு மதிப்பளித்து, பழைய கல்வித் திட்டத்தைத் திரும்பப் பெற்றார் என்பதனால் அவரைப் பாராட்டுகிறோம்!

இந்தக் கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டதும், 'தினத்தந்தி' இதழிலே வந்திருந்த ஒரு 'கார்ட்டூன்' படத்தைப் பற்றி நண்பர்கள் சொன்னார்கள். அந்தக் கேலிச் சித்திரம், கல்வித் திட்டத்தை ஒரு காக்கையாகச் சித்தரித்து, அந்தக் காக்கை மூன்று அம்புகளால் குத்தப்பட்டு கொல்லப்பட்டிருப்பதையும், அதைக் கொல்ல காட்டுமிராண்டி வேடத்தில் காமராசர் ஒரு புறமும், பெரியார், நான் ஆகிய இருவரும் இன்னொரு புறமும் வில்லும் கையுமாக நின்று கொண்டிருப்பதாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

கல்வித் திட்டம் காக்கை போன்றதென்றும், நாங்கள், காக்கை வேட்டையில் ஈடுபட்டது போன்றும் 'தந்தி'யார் கருதுகிறார்; ஆனால் அவர் ஏதோ பெரிய புலி வேட்டையில் ஈடுபட்டிருக்கிறார் என்று போதுள் அல்ல! அவர் நடக்கிற சம்பவங்களை வெளியிட்டுக் காசாக்கும் வேலையில் இருக்கிறார்!!

அந்தக் காக்கையை கொல்ல நான் மட்டும் போதவில்லை—பெரியார் மட்டும் போதவில்லை—காமராஜர் கூடப் போதவில்லை—நாட்டில் உள்ள அத்தனை கட்சிகளுமல்லவா தேவைப்பட்டன!

கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டதில் எங்களுக்கு—தி மு கழகத்தவருக்கு மட்டும்தான் பங்கு என்று நான் சொல்ல மாட்டேன்; அது அரசியல் அநாகரிகம்! திராவிடர் கழகத்துக்குப் பங்குண்டு; காமராஜருக்குண்டு; சட்டசபை காங்கிரஸ் கட்சியினருக்கு உண்டு; சட்டசபை திராவிடருக்கும், கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும்—ஏன் – ஆதித்தனுக்கும் கூட உண்டு; இத்தனை பேருடைய பலத்தால்தான் அந்தக் கல்வித் திட்டம் ஒழிக்கப்பட முடிந்தது என்றால், அது ஒரு வெறும் காக்கையாகவா இருக்க முடியும்? 'காக்கை ரூபத்திலிருந்த ஒரு பயங்கரப் பறவை' அது என்பதுதானே பொருள்?

கல்வித் திட்டத்தை எதிர்த்து நாம் பெற்றிருக்கும் வெற்றி சாமான்யமானதல்ல—6000 பேர் வரை சிறை சென்றிருக்கிறார்கள்; 6 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்—

(4-ம் பக்கம் பார்க்க)

—:o:—

புதிய டயர்கள் கூண்டில் ஏற்றப்படுவர்

மக்கள் மன்றம் தக்க தீர்ப்பளிக்கும்!

"கல்லக்குடியிலும் தூத்துக்குடியிலும், ஆச்சாரியார் அரசாங்கம் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறது. துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிரிழந்த 6 பேர்களும் தி. மு. கழகத்தவரில்லை என்றாலும் இந்த நாட்டு மக்கள் அவர்கள்! போராட்டத்திலேயே ஈடுபடாது, ரயிலிலே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தவர்களையும் இந்த அரசாங்கம் சுட்டு வீழ்த்தியிருக்கிறது.

"முன்பு, 'டயர் சுட்டான், சுட்டான்—துப்பாக்கியில் குண்டுகளிருக்கும் வரை சுட்டான்! என்ன கொடுமை!' என்று எடுத்துப் பேசிவந்த காங்கிரஸ்காரர்கள், பழுப்பு நிற டயர்களாக அல்லவா காட்சி தருகிறார்கள்!

"டயராவது, 'புரட்சி மூண்டுவிட்டது' என்று சாக்குக் கூறிக்கொண்டு சுட்டான்; இவர்கள் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தவனை எல்லாம் அல்லவா சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள்!

"எவ்வளவு பொறுப்பற்ற தன்மையிலே, சம்பவங்கள் நிகழ்ந்திருந்தால், ரயிலிலே படுத்து உறங்கிக்கொண்டிருந்தவன் தலையிலே குண்டடிபட்டு, அவன் மூளை சிதறி, உயிர் பிரிந்திருப்பான்—எண்ணிப் பாருங்கள்.

"இவற்றிற்கெல்லாம் காரணமானவர்களை நாம் விட்டுவிடப்போவதில்லை; ஒரு காலம் வரும்—அந்தத் திராவிடரின் ஆட்சிக் காலத்திலே, அவர்களை கூண்டிலேற்றத்தான் போகிறோம்—கூண்டில் என்றால் குற்றவாளிக் கூண்டில் அல்ல; மக்கள் மன்றத்தின்முன் நிறுத்தத்தான் போகிறோம்—மக்கள் அவர்களுக்குத் தரவேண்டிய நியாயமான தண்டனையைத் தருவதற்காக! அதற்கு முன் அவர்கள், தங்கள் செய்கைகளை உணர்ந்து சரியான கழுவாய் தேடிக் கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கிறேன்; இன்றேல், இன்னமும் மமதையோடிருந்தால் மக்கள் மன்றம் அவர்களைச் சும்மா விடாது."

—இவ்வாறு, 23—5—54 அன்று, திருவள்ளூரில் நடைபெற்ற ஆச்சாரியார் கல்வித் திட்ட ஒழிப்பு வெற்றி விழாப் பொதுக்கூட்டத்தில் தி மு. கழகப் பொதுச்செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள் எச்சரிக்கை விடுத்தார்.

கைத்தறி நெசவாளர் அறப்போர்

பட்டிமாற்ப்பு நகர கைத்தறித் துணிகளை (கைக்குட்டைகள்) ஏற்றுமதி செய்வோர் விலைகளை அதிகரிக்க வேண்டுமென்று கோரி கடந்த ஆறு மாத காலமாக ஏற்றுமதியாளர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பயனற்றுப்போனதாலும், அந்தத் தொழிலாளிகளின் துயரைப் போக்க ஏற்றுமதியாளர்கள் முன்வர மறுத்ததாலும் ஏற்றுமதியாளர்கள் (சீஷின் சந்த் செல்லாராம் போன்றவர்கள்) அலுவலகங்கள் முன்பு ஜூன் 7-ந் தேதிக்குப் பின், அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் செய்வதென்று பட்டிமாற்ப்பு கைத்தறி நெசவாளர் துயர நிவாரண கமிட்டி தீர்மானித்தது.

உயர்நிலைப்பள்ளி வகுப்பிற்கு சர்க்கார் தனிப் பரீட்சை கூடாது

தலைமையாசிரியர்கள் மாநாட்டு கோரிக்கை

"இப்போது உள்ள உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்புகளில் (எஸ்.எஸ்.எல்.சி.) நடத்தப்படும் சர்க்கார் பரீட்சைகளை ஒழித்துவிட்டு, அதற்கு மாறாக, மாணவர்கள் பயிலும் பள்ளிகளில் அவர்களுக்கு நடத்தப்படும் காலாகாலப் பரீட்சைகளில் அவர்கள் பெறும் தேர்வையும், பள்ளியின் குறிப்புகளைக் கொண்டும் மாணவர்களை தேர்வு செய்யும் முறையைக் கையாளலாம்,"

என்று, அகில இந்திய தலைமையாசிரியர்கள் தனி மாநாட்டில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தனி மாநாடு, சிம்லாவில் 1954-ம் ஆண்டு மே 17 முதல் ஜூன் 25 வரை நடைபெற்றது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 24—5—54 திங்கள்

தேவப் பிரசாதம்!

"வெண்ணெய்க் காய்ச்சிய நெய்யிலே மல்லிகைப் பூ நிறமும், மணமும் கொண்ட அரிசியை வேக வைத்து, ஆவின் பாலைப் பெய்து, கற்கண்டுத் தூளும் நறுமணம் தரும் பொடியும் தூவி, பதம் பார்த்து இறக்கி, பக்குவம் கெடா முன்னம் புசித்தாலும் பாழும் வயிற்றுப் பசியைத் தானே போக்கும்! ஆத்ம பசிக்கு அந்த உணவு ஆகுமோ!"

"தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டித் தான் பகுகு—பாலும் தேளி தேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்துத்தான் சாப்பிடு — வேறு எத்தகைய இனிமையான உணவுதான் உட்கொள்ளு—எல்லாம், வயிற்றுத் தீயை அடக்கும்; நாக்கு அரிப்பை ஒடுக்கும்; அவ்வளவுதானே! ஆத்ம பசிக்கு இவை எல்லாம் ஆகுமா? அந்தப் பசியைப் போக்கவல்லது — ஆமவடை மோர் குழம்புமல்ல; அக்காரவடிசலும் அல்ல; வெண் பொங்கலும் விதவிதமான துகையலுமல்ல; சித்ரான்னமுமல்ல; ஊறுகாயுமல்ல; உயரிய பண்டம் பலகாரமல்ல— தேவப்பிரசாதம்உண்டாலன்றி ஆத்மபசி போகாது அப்பனே!"

"நாவின் ருசிக்காக நானாவிதமான உணவு தேடி அலைகிறாயே, பலன் என்ன காணப் போகிறாய்? ஆத்ம பசி தீர மார்க்கம் கண்டாயா? தேவப் பிரசாதம் உண்டாயா— தேடு! தேடு! — தேவப்பிரசாதத்தைத் தேடிப் பெறு; பார் பிறகு—உன் ஆத்மா அடையும் ஆனந்தம் எத்தகையது என்பது தெரியும்; புரியும்."

அருள் நெறியில் மக்களை அழைத்துச் செல்ல வேண்டுமென்ற அவாவுடையார், இத்தகைய அருமையான உபதேசத்தைப் பன்னெடுங் காலமாக அளித்து வருகின்றனர். மக்களும் 'தேவப்பிரசாதம்' தேடி அலைகின்றனர்.

தேவப் பிரசாதம் எங்கனமிருக்கும்?

தேனினும் இனிக்கும்— ஆனால் தேன் அல்ல! பலாவினும் சுவை தரும்-ஆனால் பலாவிலே இல்லை!

இல்லா இடமும் பொருளும் கூறி என்னை இடர்ப்பட விடாதீர்; எங்கு கிடைக்கும் தேவப் பிரசாதம்? எங்கனம் இருக்கும்? பெறும் வழி யாது? முறை என்ன?

எளிது பாலகா! மிக எளிது!! உற்றுப் பார், தெரியும்! எட்டிப் பிடி, கரத்துக் கிக்கும்! முயற்சி செய், திருவிளையாக்கும்!

எனக்குச் சித்திக்குமா?

ஏன் சித்திக்காது! குழந்தாய்! வா, என் அருகே! நான் காட்டுகிறேன், அதற்கான வழியை!

மக்களுக்கும், மார்க்கக் காவலர்களுக்கும் இதுபோல் உரையாடல் நடைபெறுகிறது.

தேவப் பிரசாதம் தேடும் புனிதப் பயணம் துவங்குகிறது—தொடர்ந்து நடைபெறுகிறது. பிரசாதம் கிடைத்ததா?

பெற்றுத் தருவதாகக் கூறுபவர்களுக்கே கிட்டிற்று, என்பதே வெறும் ஐயப்பாடு தான்!

ஆனால், 'தேவப் பிரசாதம்' என்ற பெயரால் தரப்படுவனவற்றை எல்லாம், கள்ளமறியா உள்ளத்தினர் உண்டு பார்க்கிறார்கள்; அவர்களை அப் பிரசாதம் எங்கெங்கோ கொண்டு சேர்க்கிறது!

★

"திருப்பதியில் சில தினங்களுக்குமுன் யாரோ சிலர் இரு நபர்களுக்கு, கடவுள் பிரசாதம் என்று சொல்லி விஷம் கொடுத்து மயக்கமான பிறகு அவர்களிடமிருந்து பணத்தை திருடிச் சென்று விட்டதாக போலீசுக்குப் புகார் செய்யப்பட்டிருக்கிறது. இது பற்றி திருப்பதி போலீசார் புலன் விசாரித்து வருகின்றனர். மயக்கமடைந்த அந்த இரு நபர்களும் இப்போது திருப்பதி அரசாங்க ஆஸ்பத்திரியில் குணமடைந்து வருகின்றனர்."

"சித்தூரிலும் இம்மாதிரி 9 பேர் ஏமாற்றப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது."

'தெரியாதவர்களிடமிருந்து எதையும் வாங்கி உட்கொள்ள வேண்டாமென பொது மக்களுக்கு போலீசார் எச்சரிக்கின்றனர்."

போலீசார் ஆயிரம் தடவை தான் எச்சரிக்கட்டும்—தேவப் பிரசாதம் தேடும் பக்தர்கள், இனி கண் விழிப்பாக இருப்பர் என்று கூற முடியும்? இல்லை, இல்லை! "யாரோ ஒருவர், உண்மையான 'தேவப் பிரசாதம்' தரத்தான் போகிறார்," என்று நம்பிக் கொண்டுதான் இருப்பர். அந்த நம்பிக்கையைப் போக்கும் வல்லமை, போலீஸ் இலாகாவுக்கு ஏது!

★

வெண்ணிறத் தாடி! கையிலே ஜெபமாலை! சதா அதை உருட்டிக் கொண்டே இருப்பானும், 70 ஆண்டு நிரம்பிய அந்த முதியவன்!

என்ன எண்ணியிருப்பார்கள் அந்தக் கோலத்தைக் கண்டவர்கள்—தேவப் பிரசாதம் தர வல்லவர்; அவர் அடிதொழுதால் அருள் பெற்றுத் தருவார்,' என்றுதானே!

ஆனால், அவன் செய்தது என்ன? நாற்பத்தி இரண்டு இலட்ச ரூபாய் பெறுமான முன்ன நகைகளைக் களவாடியிருக்கிறான்!

பெயர் நார்முகமது; ஹைதராபாத் சமஸ்தானச் சிமான் மாளிகையில் இப்பெரும் கொள்ளையடித்துப் பிடிபட்டான்; சிறைப்பட்டான். மிகச் சிரமப்பட்டு போலீசார் 11 இலட்ச ரூபாய் பெறுமான முன்ன பொருளை மட்டுமே கைப்பற்ற முடிந்தது.

'ஜெபமாலை ஏந்திய கரம், கன்னக்கோல் தூக்கும்,' என்று எவர் எதிர்பார்த்திருப்பர்!

இப்போது, நூர் முகமது போலீசையும் ஏய்த்துவிட்டு, பாகிஸ்தானுக்கு ஓடிவிட்டானும்!

இப்படிச் சம்பவங்கள் பலப்பல வெளிவருகின்றன; வருகிறபோது மக்கள், "ஆமாம், சாது சன்யாசிக் கோலத்திலே கெடுமதியாளர்கள் பலர் உலவுகின்றனர்,' என்று பேசுவர்; பிறகோ, கோலம் கண்டு ஏமாறுவர். ஏன்? 'தேவப் பிரசாதம்' பெறவேண்டும் என்ற ஆவல்தான்!

★

"குருடு, நொண்டி, முடம் இவர்களை எல்லாம் சொஸ்தப் படுத்தி, கண் தெரியும்படியும், நடக்கும்படியும் மாற்றிவிடுவேதாக பெண்பாலர்களை மோசடி செய்ததாக சித்தில தூர்க்க ஜில்லாவில் ஹிரியூர் மடம் சுவாமி எனப்படும் சுவாமி நாராயண மகராஜ் கைது செய்யப்பட்டார். குழந்தைப் பேறு இல்லாதவருக்கு குழந்தை பிறக்கும்படி செய்வதாகவும் சாமியார் ஏமாற்றினாராம்.

"சின்னம்மா என்ற ஸ்திரீ வேறு சில பெண்களுடன் இந்தச் சுவாமியாரிடம் சென்று தமது கணவருக்கு கண் பார்வை கிடைக்கும்படி செய்யவும், தனக்கு மகப் பேறு வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். சுவாமியார் பூஜை செய்தபின் தீர்த்தம் கொடுக்கவே சிறிது சாப்பிட்ட பின் அந்த ஸ்திரீக்கு மயக்கம் வந்ததாகவும், பின்பு தீர்த்தம் சாப்பிட மறுத்ததாகவும், வீட்டுக்கு வந்த பின் மயக்கமுற்று விழுந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

"பின்பு தகவல் கிடைத்ததன் பேரில் போலீசார் அந்த சாமியாரைக் கைது செய்தார்கள்."

அந்தச் சாமியார் கைது! ஆனால் கைது ஆகாமல் இன்னமும் காவிக் கோலத்தில் உள்ள கபவர்களின் தொகை கொஞ்சமா!

போலீசாருக்கு, நாராயண மகராஜ் பற்றி கிடைத்திருக்கக் கூடிய தகவல்களில், பத்திரிகைகளில் வெளியிடுவதற்கு இலாயக்கானவைகள் மட்டுமே வெளியிடப்பட்டிருக்கும். மக்களைக் கேட்டுப் பாருங்கள்- 'வண்டி வண்டி'யாகச் சேதி கூறுவர்-அவன் செயல்பற்றி!

கண்டிப்பர், காறித் துப்புவர்; ஆனால், அடியோடு திருந்துவரா? அதுதான் இல்லை! மீண்டும் மீண்டும் 'தேவப் பிரசாதம்' தேடி அலைவர்; ஏன்? அவ்வளவு நம்பிக்கையைப் புகுத்திவைத்திருக்கிறார்கள்!!

* * *

'தேவப் பிரசாதம்' தந்து பொருளைத் திருடிய கபமை, கண்டுபிடிக்கப்பட்டது-ஆனால் பிடிபடாத குற்றவாளிகள் அநேகர் உலவுகின்றனர்.

திருப்பதியில் திருவிளையாடல் நடத்தியவர்கள், பொருளைப் பறித்தனர்; ஆனால் 'தேவப் பிரசாதம்' தருவதாகக் கூறிக்கொண்டு மக்களின் மதியை மாய்த்து, அவர்களை மிருகத் தன்மைக்குக் கொண்டு சேர்த்து விட்டிருப்பவர்கள் எத்தனை! எத்தனை!!

"என் தொழுகை முறையிலே தான் தேவப்பிரசாதம் கிடைக்கும்; என் வேத புத்தகமே தேவப்பிரசாதம் பெறும் வழியை நிச்சயமாகக் கூறும்; என் அபிஷேக முறையே அலாதியானது; என் ஆராதனைக்கு ஈடு அவனியில் ஏது?"

என்றெல்லாம் விளம்பரப் பேச்சை, வினயமாகப் பேசிடும் வித்தகர்கள் எவ்வளவு! அவர்களை நம்பி, நினைப்பைக் கெடுத்துக் கொள்ளும் நேயர்கள் எவ்வளவு!!

"தேவப் பிரசாதம் எனின், பைத்தியக்காரர்கள், பலகாரம் என்று எண்ணிக்கொண்டார்களே! தேவப்பிரசாதம் என்றால் ஆண்டவன் அருள் என்பது பொருள்; அதை அடையும் வழி தான் மார்க்கம்; இதை அறியாது, பேதையினரே"

என்று, பச்சாதாபம் கலந்த குரலில் பேசுவோரைக் காணலாம், மனக் கண்ணால்!

அத்தகையோர் கூறும் முறைகளைக் கையாண்ட மக்கள், எத்தன் ஒருவன் தந்த தேவப் பிரசாதத்தை உண்டு, மயக்குற்று வீழ்ந்து, பொருளைப் பறிகொடுத்ததை விடக் கொடுமையான நிலையையே பெற்றிருக்கிறார்கள்!

'தேவப் பிரசாதம்'—அதாவது அருள்—பெறுவதற்கான வழி யாது?

"எவர் காட்டிடும் வழி நேரானது; சீரானது; தேவ சம்மதம் பெற்றது"—என்ற பிரச்சினைக்காக நடைபெற்ற போர்கள் ஓடிய இரத்த ஆறுகள், கொஞ்சமா? இன்றளவும் தீர்ந்ததா பிரச்சினை?

பகுத்தறிவு உலகம் கேலி செய்கிறதே என்பதற்காகச் சில சமயங்களிலே, 'எம்மதமும் சம்மதம்,' என்று பேசுகிறார்கள் இப்பெரியவர்கள்; ஆனால், ஒவ்வொருவர் உள்ளத்திலும் தமது முறை சிறியது என்பது மட்டுமல்ல—பிறருடைய முறை பித்தத்தின் விளைவு என்ற எண்ணந்தான் ஓங்கி நிற்கிறது! சில வேளைகளில் காட்டாட்டமும் காண்கிறோம்!!

காஞ்சிபுரத்தில் நடைபெறும் திருவிழாவில் அனுமாருக்கு—(வாகனம்) - தென்கலை நாமமா, வடகலை நாமமா,' என்று கிளம்பிய தகராறு, அடிதடி அளவுக்கு முற்றி, கடைவீதியிலே வாகன் தவிக்க, 'நாம் யார் பக்கம் சேருவது,' என்று தெரியாமல் மக்கள் திகைக்க, 'நாம் சட்டத்தின்படி நடப்பதா, நமது நாமத்தின்படி நடந்து கொள்வதா,' என்று தெரியாமல் போலீஸ் திணற காட்சி, கண்றாவியாகி விட்டதாம்!

அனுமனுக்கு நாமம், மாறி மாறி போடப்பட்டதாம்!

நிஜக் குரங்காக இருந்தால் 'கடித்துக் குதறி' விட்டிருக்கும் — வாகனம் என்ன செய்யும்—வந்தது வரட்டும் என்று இருந்து விட்டது!

சர்வ மத சமரசம் குறித்து இந்தச் சிலர்கள் பேசும்போது கேட்டால், மனம் பாகாய் உருகும்.

பிறையும், சிலுவையும், பாஞ்சசன்யமும்—எல்லாம் வேறுவேறு! விளக்கமிலார்க்கு அங்கனம் தோன்றும்! எமக்கு எல்லாம் ஒன்றே!'— என்று பேசுவர்; சமயம் கிடைக்கும்போதோ, மிருகம் அஞ்சும்— அங்கிலக்குத் தாவிச் செல்கின்றனர்.

இவர்களிடம் கேட்டுத்தான் தேவப்பிரசாதம்—அருள்— பெற, மக்கள் சம்மதிக்க வேண்டுமாம்! அதுதான் ஆஸ்திகமாம்! இதை ஆராய்வோர் நாத்திகராம்!

'எம்மதமும் சம்மதம்,' என்று பேசும் புனிதவான்கள், இங்கு, இந்த இரு திங்களாக—திண்ணைப் பேச்சிலிருந்து' துவங்கி பாராளுமன்றம் வரை—பேசிக்கொண்டிருக்கும் பெரும் பிரச்னை, "கிருஸ்தவர்கள் மதமாற்றச் செயலில் ஈடுபடுவதைச் சர்க்கார் அனுமதிக்கலாமா?" என்பதாகும்.

தேவப்பிரசாதம் — ஐயன் அருள்—பெற எடுத்துக் கொள்ளப்படும் முயற்சியை வரவேற்க வேண்டியவர்கள், அதே முயற்சியில் ஒன்றான கிருஸ்தவ மார்க்கத்துக்கு மாற்றப்படுவதை ஏன் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டும்? பதறுவானேன்? பயம் ஏன்? எம்மதமும் சம்மதமாயிற்றே!!

இந்தப் பித்தம் இங்கு மட்டும் தான் என்று எண்ணிட வேண்டாம்—எங்கும் பரவி இருக்கிறது.

பிரிட்டிஷ் ராணி, இலங்கை வந்திருந்தபோது, 'புத்த விகாரம்' ஒன்றுக்குச் சென்றபோது, அந்தப் புனித இடத்து முறைப்படி, காலில் அணிந்திருந்த 'செருப்பை'க் கழற்றி விட்டு, உள்ளே சென்றாராம்!

அந்தப் 'பண்பு' இலங்கையில் பலராலும் பாராட்டப்பட்டது!

அரசியாரும், 'எம்மதமும் சம்மதம்' என்ற கோட்பாட்டுக்காகவே, புத்தாலயம் சென்றார்!

ஆனால், கிறிஸ்தவ மார்க்கப் பெரியவர்களுக்கு, இது கடுங் கோபத்தைக் கிளப்பிவிட்டது; வேதனைப் படுகிறார்கள்— அரசி மார்க்க நெறியினின்றும் தவறி நடந்துகொண்டார்கள்'-என்றுகண்டிக்கிறார்கள்!

"கிருஸ்தவ மார்க்கத்தவராயினும், அரசியார், நமது மார்க்கத்துக்கு உரிய மதிப்பளித்தார், காணீர்," என்று இலங்கையிலுள்ள புத்த மார்க்கத்தவர் பூரித்தனர்; ஆனால் அதே செயல், ஸ்காத்லாந்து நாட்டு கிருஸ்தவப் பெரியவர்களுக்கு ஆத்திரம் ஊட்டிவிட்டிருக்கிறது.

இருவரையும் ஒரே மேடையில் பேசச் சொல்லுங்கள்— பகுத்தறிவாளரைச் சாடச் சொல்லுங்கள்—கணீர், கணீர் என்று திருவாசகம் ஒலிக்கும்; 'எம்மதமும் சம்மதமே' என்பர்; தோட்டத்திலே பலவண்ண மலர் இருத்தல்போல, தேவப்பிரசாதம் பெறுவதற்கு ஐயன் பல மார்க்கங்களை அருளியிருக்கிறார் என்பர்; கல்லும் உருகும் —கண்ணீர் உகுப்பர் — பேச்சைக் கேட்டு!

நடவடிக்கையைக் கவனியுங்கள்:—

"பிரிட்டனின் அரசி இரண்டாவது எலிசபெத்தும், அவரது கணவர் எடின் பரோ கோமகனும் தங்கள் சுற்றுப் பயணத்தின்போது இலங்கையில் புத்தர் கோவில் ஒன்றில் தங்கள் கால் பூட்சுகளைக் கழற்றிச் சென்று வணங்கினார்களாம்; இது கண்டிக்கத்தக்க செய்கை என்று பிரஸ்பிடிரியன் சர்ச்சைச் சேர்ந்த குருமார்கள் பிரதமர் சர்ச்சிலுக்கு செய்தி அனுப்புவது என்று முடிவு செய்தனர்."

இது செய்தி!

'தேவப்பிரசாதம்' என்று

(3-ம் பக்கம் பார்க்க)

உள்நாட்டுப் போர் மூளக்கூடும்!

கராச்சியின் போக்கால் விளையக் கூடிய விபத்து!

மில் முதலாளிகள் சதி அம்பலமாகிறது

கிழக்கு வங்கக் கலகத்துக்குக் காரணம், அங்குள்ள மில் முதலாளிகளே என்று இப்போது பகிரங்கமாகக் கூறப்படுகிறது.

"மத்திய சர்க்காரின் பேச்சின்படி, டாக்காவிலுள்ள ஆடம்ஜீ மில்களின் நிர்வாகிகள் ஆடிய ஆட்டமே கலகத்துக்குக் காரணம்."

என்று, ஜின்னு அவாமி லீக் கராச்சி கிளையின் தலைவர் எம். எச். உஸ்மானி, நிருபர்களிடம் கூறினார்.

கடந்த இரண்டு மாதங்களாக, மில் நிர்வாகிகள் ஆயுதங்களைச் சேகரம் செய்திருந்ததாக பொறுப்பானவர்கள் தமக்குத் தெரிவித்ததாக உஸ்மானி கூறுகிறார்.

"கிழக்கு வங்கத்தில் இராணுவ ஆட்சியோ, கவர்னர் ஆட்சியோ புகுத்தினால், பாகிஸ்தானில் உள்நாட்டுப் போர் மூண்டுவிடும்,"

என்று உஸ்மானி எச்சரித்திருக்கிறார்.

ஒரு 'டன்' அரிசி இனாம்!

இங்கல்ல; பர்மாவுக்கு!

டில்லியின் 'ஜம்பம்'!

ஒரு 'டன்' அரிசியை அனுப்பியிருக்கிறது, டில்லி!

அரிசி மிகவும் உயர்ந்த ரகமாம் — அனுப்புவதற்கென்றே, தேர்ந்தெடுக்கப்பட்டதாம்!

டேராடூனில், விலைக்கு வாங்கப்பட்ட இந்த அரிசியின் ரகம் 'பசுமதி' எனும் பெயர் கொண்டதாம்!

ஒரு டன் 'பசுமதி'யும், பர்மாவுக்கு, அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது—இலவசமாக! நன்கொடையாக!!

பர்மாவில் நடைபெறும் புத்த மதத்தவர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக உலக முழுமையுமிருந்து வந்திருக்கும் புத்த 'பிக்கு'க்களுக்கென்று, அனுப்பப்பட்டிருக்கிறதாம்!

அரிசிக்கு அழுகிறது, நாடு! அங்கே அனுப்பிவைக்கப்படுகிறது—இலவசமாக! நன்கொடையாக!!

பண்டித நேருவின் 'ஜம்பத்'துக்கு இது ஓர் எடுத்துக்காட்டு!

புகை பிடித்தல்

இருதயத்துக்குக் கேடேலாம்!

ஏல்பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர், புகை பிடிப்பதால் இருதய நோயும், புற்று நோயும் வருவதாகத் தெரிவித்தார்.

இதை நிச்சயமாகச் சொல்ல முடியாது என்றபோதிலும், நிச்சயம் என்று உறுதிப்படுத்தப் போதிய காரணங்கள் உண்டு என்று அவர் மேலும் கூறினார்.

புகை பிடித்தல் இருதய ஓட்டத்தை அதிகரிக்கிறது; இரத்த அழுத்தத்தை அதிகரிக்கிறது; மனிதனது வாழ்வுக் காலத்தை குறைக்க முயற்சிக்கிறது—என்பது அவர் கருத்தாகும்.

டாக்டர் ஈவார்ட்ஸ் ஏ. கிரஹாம் என்ற புற்று நோய் நிபுணர், "இருதயத்தில் ஏற்படும் புற்று நோய்க்கும் அளவுக்கு மீறி புகை பிடித்தலுக்கும் தொடர்பு உண்டு," என்று கூறுகிறார்.

இஸ்ரேல் அகுப்புகள் ஜோர்டான் எல்லைக்குள் மூன்று மைல் உள்ளே நுழைந்து அரேபியர் கூடாரம் ஒன்றைத் தாக்கியது.

தி.மு.க பொதுச்செயலாளர்

அண்ணாதுரை சுற்றுப் பயண நிகழ்ச்சி

✶

30—5—54 : அயனாவரம்—
மாலை: தி மு. க. போதுக் கூட்டம்.

31—5—54 : கோடம்பாக்கம்—
மாலை : தி மு க போதுக் கூட்டம்.

1—6—54 : கோடேக்கூர்—
மாலை: தி. மு. க. போதுக் கூட்டம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பெயசிட்டுக் கூறப்படும் அருள் பெற—அமைந்திருப்பதாகக் கூறப்படும் மார்க்கங்களுக்குள் இவ்வளவு போட்டியும் பூசலும் எழக் காரணம் என்ன?

"என் வாடிக்கைக்காரர்களை நீ எப்படி அழைத்து உன் சரக்கைக் காட்டலாம்?'—என்று, சென்னையில் 'குஜிலி'க் கடை வியாபாரிகள் சண்டை போடுகிறவர்கள் இப்போது குறைந்துவிட்டது.

மார்க்கத் தலைவர்களிடம் இந்தக் குணம் இன்னும் தலைவிரித்தாடுகிறது.

இந்நிலையில், 'தேவப்பிரசாதம்' தேடி இவர்களை நாடுவோர், எத்தன் கொடுத்த பண்டத்தைத் தின்று, மயக்கமுற்று விழுந்து, பொருளைப் பறிகொடுத்தது போலன்றி, வேறு என்ன கதி அடைய முடியும்!

கழகக் கூட்டங்கள்

✶

இடைப்பாடி

ஆரம்பப் பாடசாலை எதிரில்
25—5—54 செவ்வாய் மாலை
தலைவர் : அங்கமுத்து
பேசுபவர் :
ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ

★

திட்டை (சீர்காழி)

25—5—54 செவ்வாய் மாலை
தலைவர் : ஆர். சண்முகம்
பேசுவோர் :
க அன்பழகன்
ஆர். பாலகுருசாமி

★

செம்பொன்னார்கோவில்

26—5—54 புதன் மாலை
தலைவர் : எம். அழகர்சாமி
பேசுவோர் :
க. அன்பழகன்
என். சி. பன்னீர்செல்வம்
அறிவுடைநம்பி

★

மேலப்பாளையம்

26—5—54 இரவு 8 மணிக்கு
இடம் : பஜார் மைதானம்
பேசுவோர் :
எம். ஆர். கணேசன்
சந்தசாமி
அலிசேக்மன்சூர்
சங்கரலிங்கம்

குறிப்பு : அன்று மாலை 4 மணியளவில் பஜீத் மாணவர் மன்ற திறப்பு விழா நடைபெறும்.

★

வெஞ்சமடை

(பரோவா திடலில்)
(உமேஸ்பேட்டை)
26—5—54 புதன் மாலை
தலைவர் : கோ. பேரையன்
பேசுவோர் :
மதுரை எஸ். முத்து
கோவை செழியன்

ராஜ்யங்கள் புனரமைப்பு

எல்லாப் பிரச்சினைகளையும் கமிஷன் ஆராயும்

"ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனின் விசாரணைக்கு அப்பாற்பட்டது எதுவும் இல்லை; கமிஷனின் பொறுப்புகள் அதிகமானவை; ஆகவே, அது எந்தப் பிரச்சினை பற்றியும் சர்க்காருக்கு சிபார்சு செய்ய முடியும்,"

—என்று, ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் உறுப்பினர் எச். என். குன்ஸ்ரு பத்திரிகை நிருபரிடம் தெரிவித்தார்.

"எல்லைப் பிரச்சினைகள் பற்றிய தகராறு கமிஷன் பரிசீலனைக்கு வருமா?" என்று கேட்டபோது, "இந்தியாவில் உள்ள ராஜ்யங்களின் எதிர்காலம் எங்கள் முன்னே உள்ளது" என்று அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது :—

"கமிஷன் முன்பு எந்தப் பிரச்சினையையும் எடுத்துக்கூறத் தடையேதும் இல்லை; ஆனால், கமிஷன் அந்தப் பிரச்சினையை எவ்விதத்தில் ஏற்றுக்கொள்கிறது என்பது வேறு விஷயமாகும். எந்தக் கட்சியினரையும் அவர்கள் கோரிக்கை எவ்விதமான போதிலும் அதை எடுத்துச் சொல்லக் கூடாது என்று நாங்கள் தடை செய்யவில்லை.

"எங்கள் விசாரணை, ராஜ்யங்கள் புனரமைப்பு பற்றியதே; நாங்கள் ஒரு ராஜ்யத்தையே நீக்கிவிடலாம் என்றும், ஒரு ராஜ்யத்தைப் பிரித்து மற்றொரு ராஜ்யத்துடன் சேர்க்கலாம் என்றும் கூறலாம்."

ஆந்திர சர்க்காரின் அக்கிரமப் புத்தி

ஆந்திர சர்க்கார் சென்னையையும், அதனைச் சுற்றியுள்ள பல மொழி பேசும் பிரதேசங்களையும் சேர்த்துத் தனி ராஜ்யமாக்க வேண்டும் என்று ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்.

ஹைதராபாத், சென்னை, ஒரிசா, மைசூர், மத்தியப் பிரதேசத்திலுள்ள தெலுங்கு பேசும் பிரதேசங்களை ஆந்திராவுடன் இணைத்து விசால ஆந்திரம் ஏற்படுத்த வேண்டுமென்றும், கிருஷ்ணகிரி தாலுகாவின் வடமேற்குப் பகுதியையும், சேலம் மாவட்டத்திலுள்ள ஓசூர் தாலுகா முழுமையையும் ஆந்திராவுடன் இணைக்க வேண்டுமென்று கமிஷனிடம் கோருவார்கள்.

அதேபோல் மைசூர் ராஜ்யத்திலுள்ள கோலார், சித்தலதுர்க்கம், தும்கூர், பெங்களூர் பகுதிகளையும் ஆந்திராவுடன் இணைக்க வேண்டுமென்று கோருகின்றனர்.

நடையனேரி இளைஞர் மறுமலர்ச்சி மன்றம்

11—5—54 இரவு 8 மணிக்கு செயலாளர் என். நாகலிங்கம் தலைமையின் கீழ் செயற்குழு கூடி மன்றத்தின் முதலாவது ஆண்டு விழாவை ஜூன் இரண்டாவது வாரத்தில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கோவில்பட்டி வட்டார ஆதிதிராவிட சீர்திருத்தச் சங்கம்

பம்மாய். மே 16—

1—5—54 மாலை 7 மணிக்கு செயற்குழுக் கூட்டம் இரா. க. பெரியதனம் தலைமையில் நடைபெற்றது.

சங்க முதல் ஆண்டு நிறைவு விழாவை 23—5—54 அன்று நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தோழுந்தூரில் பொதுக் கூட்டம்

16—5—54 3 மணியளவில் தி மு கழக தோழர்கள் நிச்சட்டி ஏந்தி நகரை வலம் வந்து தீ மிதித்து கடவுள் தன்மை யில்லையென்று நிரூபித்தனர். அன்று மாலை 6 மணியளவில் தோழர் கோடிலிங்கம் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. "திராவிடத்தில் நாம்" எனும்பொருள் பற்றி தோழர்கள் வி ஏ. பாண்டியன், பன்னீர்செல்வம், காழி அமிர்தலிங்கம் ஆகியோர் பேசினர்.

சின்ன பூலாம்பட்டி பகுத்தறிவு படிப்பகம்

16—5—54 இரவு 8 மணியளவில் படிப்பகத்தின் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே பி ஜோதி, கே. ஏ அனீபா ஆகியோர் தி மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், திராவிடம் பிரிவின் அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

வெற்றிலை கொடிக்கால்: பூச்சி பற்றியதின் விளைவு

ஒன்றரை லட்சம் குடும்பம் சீர்குலைவு

முதலமைச்சரிடம் எம். பி. சுப்பிரமணியம் ஆர். ரங்கசாமி முறையீடு

சென்னை சட்டசபை உறுப்பினர்களான தோழர்கள் எம். பி சுப்பிரமணியம், ஆர். ரெங்கசாமி ஆகியோர் சென்னை சர்க்கார் விவசாய இலாகா அமைச்சர் பக்தவச்சலம் அவர்களிடம் சேலம், வேலூர், பொத்தனூர் ஆகிய பகுதிகளில் உள்ள வெற்றிலைக் கொடிக்கால் பற்றிய மகஜர் ஒன்று கொடுத்தனர்.

வேலூர், பொத்தனூர், பாண்டமங்கலம், மோகனூர், புகளூர் ஆகிய பகுதிகளில் உள்ள வெற்றிலைக் கொடிக்கால்கள் பூச்சியினால் நாசமாகி $1\frac{1}{2}$ லட்சம் பேருடைய வாழ்க்கை சீர்குலைந்து போய்விட்டதென்றும், சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்றும் அங்கே ஒரு மாதிரி பண்ணை வைக்க வேண்டுமென்றும், வரி வசூல் செய்யாமல் வேண்டுமென்றும், அவதிப்படும் தொழிலாளிகளுக்கு சர்க்கார் வட்டியில்லாமல் கடன் தர வேண்டுமென்றும் மகஜரில் கூறப்பட்டது.

அமைச்சர் உடன் கவனித்து ஆவன செய்வதாக வாக்களித்தார்.

* * *

குறிப்பு:— மே திங்கள் 1, 2-ந் தேதிகளில் நடந்த சேலம் மாவட்ட தி மு. கழக மாநாட்டில் வெற்றிலைக் கொடிக்கால் பூச்சியினால் பாதிக்கப்படுவதைக் குறித்த 15-வது தீர்மானத்தில் கீழ்க்கண்டபடி கூறப்பட்டிருக்கிறது :

'இந்திய உபகண்டத்தில் வெற்றிலை உற்பத்தியில் முன்னணியில் நிற்பதும், வெற்றிலைக் கொடிக்கால் தொழிலையேநம்பி வாழும் மக்களைக் கொண்ட வேலூர், பொத்தனூர், பாண்டமங்கலம், ஆத்தூர், மோகனூர் முதலிய பகுதிகளில் பூச்சி விழுந்ததின் காரணமாக கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள வெற்றிலைத் தோட்டங்கள் அழிந்துவிட்டன; இந்த நோயை உடனடியாகத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதுடன் மாதிரி வெற்றிலை தோட்டங்கள் அமைக்கவேண்டுமென்றும், இத் தொழிலால் பாதிக்கப்பட்ட லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு நஷ்டஈடும் கடன் உதவியும் உடனடியாகச் செய்து தருமாறு அரசினரை இம் மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது"

பொது வாசகசாலைகளுக்கு 'நம் நாடு'

திண்டுக்கல் நகராட்சி மன்ற முடிவு

திண்டுக்கல் நகரசபையின் கூட்டம் திரு. கே. கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது நகர் மன்ற உறுப்பினர் தோழர் பி சமதர்மம் அவர்களால் பிரேரிக்கப்பட்டு தோழர் எ. சோமசுந்தரம் அவர்களால் ஆதரிக்க தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

"நமது நகரசபையின் சார்பாக நடைபெறும் வாசகசாலைகளுக்கு 20—5—54-ந் தேதியிலிருந்து "நம் நாடு" நாளிதழ் வாங்கிப் போடுவதென தீர்மானிக்கிறது."

குறிப்பு:— திண்டுக்கல் நகரசபையின் சார்பாக கீழ்க்கண்ட இடங்களுக்கு வாசகசாலைகள் திறக்கப்பட்டிருக்கிறது.—

1. பனகால் ரீடிங் ரூம்
2. கணபதி அக்ரஹாரம்
3. மேட்டு ராஜக்காபட்டி
4. பாறைப்பட்டி
5. மேட்டுப்பட்டி
6. பேகம்பூர்
7. நாகல்நகர்
8. சந்தை ரோடு
9. மகுதி சந்து
10. தொந்தியா பிள்ளை சந்து

உலக அரங்கில்......

டெல் அவீவ் :

இஸ்ரேல் கடல் வண்டி டெல் அவீவிலிருந்து ஹைபாவுக்குச் செல்லும் வழியில், ஜோர்தான் எல்லையில் துப்பாக்கியால் சுடப்பட்டதாக இஸ்ரேல் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். சில குண்டுகள் என்ஜினைத் துளைத்ததாகவும், ஆனால் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என்றும் தெரிகிறது.

★

ஜினிவா :

பாரிசிலிருந்தும், இந்தோ—சீனாவிலிருந்தும் இராணுவ நிபுணர்களை ஜினிவாவிற்கு அனுப்பும்படி பிரெஞ்சு அதுக்கோஷ்டி பிரமுகர் கூறுகிறார். போர் நிறுத்தம் ஏற்பட்டதும்; அதை அமுலுக்குக் கொண்டுவருவது பற்றிய நுணுக்கங்களை நிபுணர் கமிட்டியின் மூலம் பரிசீலிப்பதே அதன் நோக்கம்.

* * *

ஐ. நா. சபையின் இந்தியப் பிரதிநிதி தோழர் வி. கே. கிருஷ்ண மேனன் சீனப் பிரதமர் சூ-என்-லாயைச் சந்தித்து 3 மணி நேரம் பேசினார். இவ்விருவரும் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும். அதற்கு முன்னர் தோழர் மேனன் பிரிட்டிஷ் கோஷ்டித் தலைவர் லார்டு ரீடிங்கை சந்தித்துப் பேசினார்.

★

சியோல் :

கொரியாவுக்கு நடுநிலைமைக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டுமென்று கூறும் சீனப் பிரதமர் சூ-என்-லாயின் திட்டத்தை தென் கொரிய சர்க்கார் நிராகரிக்கிறது என்று தென் கொரிய அதிகாரி ஒருவர் கூறுகிறார். கொரியாவை ஐக்கியமாக்கவேண்டும் என்ற கம்யூனிஸ்டு திட்டத்தை முன்னுக்குக் கொண்டுவரவே கமிஷன் பாடுபடும் என்றார்.

★

கெய்ரோ :

மேற்கத்தி வல்லரசுகள் கொண்டுவரும் மத்திய கிழக்குப் பாதுகாப்பு சம்பந்தமான திட்டத்துடனும் எகிப்து சேராது என்று எகிப்து சர்க்காரின் பிரதமர் நாசிரும், வெளி விவகார இலாகா அமைச்சர் சலீமும் கூறுகின்றனர். சூயஸ் கால்வாய்ப் பிரச்சினை பற்றி பிரிட்டனுடன் புதிய பேச்சு வார்த்தைகள் எதும் கிடையாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

★

பாரிஸ் :

பிரெஞ்சிந்தியா பற்றி பாரிசில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் திங்களன்று முக்கிய கட்டமாகும். தங்கள் இந்தியக் காலனிகள் பற்றிய எதிர் காலத்துக்கு பாரிஸ் சர்க்கார் திட்டமொன்றை கூறினர். இந்தியாவின் திட்டத்தகுமானத் திட்டத்தை இந்தியா வரவேற்கவில்லை இவ்வாறு இருக்கும் பாரிஸ் பேச்சுவார்த்தைகள் பற்றிய முடிவு தெரியலாம்.

* * *

பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி இவைகளிடையே 'சார்' பிரதேசம் பற்றி நல்லதொரு முடிவு ஏற்பட்டுவிட்டது என்று வெளியான செய்தி சரியானதல்ல என்று பிரெஞ்சு வெளிநாட்டிலாகா அதிகாரி ஒருவர் மறுத்தார்.

★

வாஷிங்டன் :

தென்கிழக்கு ஆசிய இராணுவ மாநாடு ஜூன் முதல் தேதி வாஷிங்டனில் ஆரம்பமாகும் என்று தெரிகிறது. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய நாடுகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் என்று தெரிகிறது.

லண்டன் :

பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலுடன் அந்தோனி ஈடன், ஜினிவா மாநாடு பற்றிக் கலந்து பேசினார். மாநாடு தோல்வியடைந்தது என்று அவசர முடிவிற்கு வரவேண்டாம் என்று ஈடன் கேட்டுக்கொண்டார். மீண்டும் அவர் ஜினிவா செல்கிறார். (ஜினிவா மாநாடு வெற்றியடைவதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை என்று நம்பப்படுகிறது)

★

செய்கோன் :

இந்தோ—சீனப் போரில், பிரான்ஸ்-கம்போடிய துருப்புகள், போனம்பென்னுக்கு 20 மைல் வடகிழக்கே உள்ள சியங் பாங் என்ற பிரதேசத்தை காலி செய்து விட்டன என்று செய்கோனில் உள்ள பிரெஞ்சு இராணுவத் தலைமைக் காரியாலயம் தெரிவிக்கிறது.

★

தைப்பே (பார்மோசா)

தேசிய சீன விமானங்கள் இரண்டு கம்யூனிஸ்டு சீனாவின் சிங்கியாங் மாகாணத்தின் மீது பறந்து ஆறு ரஷ்ய விமானங்கள் மீது தாக்குதல் நடத்தின என்று தெரிகிறது. தாக்குதலுக்கு உள்ளான ரஷ்ய ஜெட் விமானங்கள் உள்நாட்டிற்குத் திரும்பிச் சென்று விட்டன என்று கூறப்படுகிறது.

★

கான்பெர்ரா :

கொழும்புத் திட்டப்படி ஆஸ்திரேலியா, பாகிஸ்தானுக்கு அனுப்ப வேண்டிய 100 டிராக்டர்களை இவ்வார இறுதியில் 'பெண்டகோட்டா' என்ற கப்பல் மூலம் கராச்சிக்கு அனுப்பும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

★

கேப்டவுன் :

தென் ஆப்பிரிக்க சட்டசபையின் கூட்டுக் கூட்டத்தில் சபாநாயகரின் போக்கை எதிர்த்து எதிர்க் கட்சி உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் வெளியேறினார்கள். சபாநாயகரின் மீது கண்டனத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர, எதிர்க் கட்சித் தலைவருக்கு அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்தே இந்த வெளியேற்றம் நடைபெற்றது.

★

மாஸ்கோ :

சோவியத் நாட்டில் சுற்றுப் பயணம் செய்யும் இந்தியப் பெண்கள் தூதுக் குழுவினர், விதிமுறை நோக்குடன் கருங்கடல் பிரதேசத்திற்குச் சென்றுள்ளனர். நான்கு நாட்கள் அவர்கள் அங்கே தங்குவார்கள் என்று தெரிகிறது.

★

சிங்கப்பூர் :

கட்டாய இராணுவப் பயிற்சிக்கு தங்களைப் பதிவு செய்து கொள்ள மறுத்து 2000 சீன மாணவர்கள் கலகம் செய்தனர். பள்ளி ஒன்றில் புகுந்துகொண்டு இவர்கள் உள்ளே தாளிட்டுக் கொண்டனர். சிங்கப்பூரில் 10,000 மாணவர்கள் பதிவு செய்யும் கடைசி நாளன்று கிளர்ச்சி செய்வார்களென்பதால் போலீசார் விழிப்புடன் உள்ளனர்.

★

கயானா :

மக்கள் முன்னேற்றக் கட்சியின் தலைவர் எல். எப். எஸ். பர்ன்ஹாம் என்பவருக்கு லைசென்ஸ் இன்றி மோட்டார் ஓட்டியதாக 10 ஷில்லிங் அபராதமும் கட்டத் தவறினால் ஒருவார சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டுமென்று உத்தரவிட்டார். இந்த அபராதத் தொகையைக் கட்ட இரண்டு மாத அவகாசம் அவருக்குத் தரப்பட்டது.

கழகக் கூட்டங்கள்

★

அத்தாணி

ரேடியோ மைதானத்தில்
25—5—54 மாலை 6½ மணிக்கு
தலைவர் : கே. ரங்கசாமி
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

ஆம்பூர்

பஜார் முகமதலி மைதானத்தில்
26—5—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
என். வி. நடராசன்
ஏ. கோவிந்தசாமி, எம் எல் ஏ

கல்வித் திட்டம்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்த திட்டத்தை எதிர்த்தும், இன்னும் இரண்டு போராட்டங்களில் ஈடுபட்டும் !

இன்று தி. மு. கழகம் என்று சொன்னால், சாதாரணமானதல்ல; எங்களின் வலிவும், பொலிவும் எத்தகையன என்பதை அரசாங்கம் ஓரளவுக்கு உணர்ந்திருப்பதாகவே நான் நினைக்கிறேன்,

இன்று நாட்டில் உள்ள எந்தக் கட்சியினரானாலும் சரி—தி. மு. கழகத்தைப் பற்றிப் பேசித்தான் ஆக வேண்டும் என்கிற நிலை ஏற்பட்டுள்ளது.

நமது கொள்கைகள் புகாத இடமில்லை; நமது கொடிகள் பறக்காத குக்கிராமங்களும் இல்லை என்ற நிலை காணப்படுகிறது.

நமது கொள்கைகளைத் தடவிப் பார்க்காத நெஞ்சமுடைய எந்தக் கட்சியினரும் இல்லை இன்று !

பாட்டுக் கச்சேரி முடியும் போது மங்களம் பாடுவதைப் போல், எந்தக் கட்சியினர் கூட்டம் போட்டுப் பேசினாலும்—அவர்கள் தமிழரசுக் கழகமாயினும், கம்யூனிஸ்டுகளாயினும்—கடைசியாக சரியாகவோ, தவறாகவோ, தி. மு. கழகத்தைப் பற்றிப் பேசித்தான் கூட்டத்தை முடிக்கிறார்கள் — பேசினால் தான் கூட்டம் பூர்த்தியாகும் என்னும் நிலை வளர்ந்துவிட்டிருக்கிறது.

இத்தனைக்குப் பிறகும் நம்மை — நாட்டவரின் உள்ளங்களில் நிலையான இடத்தை நிரந்தரமாய்ப் பிடித்துவிட்டிருக்கிற நமது கொள்கைகளை—மறைத்துவிட எண்ணுபவர்கள், அரசியல் கருத்துக் குருடர்கள்தான் !"

இவ்வாறு பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் வெற்றி விழா குறித்துப் பேசிவிட்டு பிறகு, திராவிட நாடு பிரியவேண்டிய காரணங்களை எடுத்து விளக்கிப் பேசினார்.

மற்றும் தோழர்கள் டி. சண்முகம், எம் எல். ஏ., அ பொன்னம்பலனார் ஆகியோரும் பேசினர்.

ரங்கூன் :

இந்தியாவுக்கு அளித்தது போன்று பர்மாவுக்கும் உதவி அளிக்கத் தயார் என்று அமெரிக்க சர்க்கார் பர்மிய சர்க்காரிடம் மீண்டும் ஓர் முறை அறிவித்துள்ளனர். இவ்வுதவி அரசியல் நோக்குடன் அளிக்கப்படவில்லை என்று தெரிந்தால் பர்மிய சர்க்கார் இந்த உதவித் திட்டத்தை அனுதாபத்துடன் கவனிக்கும் என்று பர்மியப் பத்திரிகைகள் எழுதியுள்ளன.

செய்திக் கதிர்

பம்பாய் :

பம்பாய் சர்க்காரின் தற்போதைய கல்விக் கொள்கையை எதிர்த்து பெரும்பான்மையான பெற்றோர்கள் அதிருப்தி அடைந்திருக்கின்றனர் என்று பம்பாய் ராஜ்ய பெற்றோர் சங்கம் நேருவுக்கு மகஜர் அனுப்பியிருக்கிறது.

★

புதுடில்லி :

'செகண்டரி கல்வி முறை பற்றி தலைமை ஆசிரியர்கள்' என்கிற பெயரின் கீழ் அகில இந்திய தலைமை ஆசிரியர்கள் அரங்கு செய்துள்ள சிபார்சுகளை கல்வி மந்திரி இலாகா பிரசுரித்துள்ளது.

★

எர்ணாகுளம் :

மலையாள மொழி பேசும் பகுதிகளின் வருங்காலம் பற்றி ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் அபிப்பிராயங்களைக் கேட்டது. சுமார் 90 பேர் கமிஷன் முன்பாக ஆஜராகி சாட்சியமளித்தனர். ராஜ்ய சர்க்கார் எதிர்க் கட்சித் தலைவரான பனம்பள்ளி கோவிந்தமேனன் கமிஷனைச் சந்தித்தார்.

★

சென்னை :

சனிக்கிழமையன்று சென்னைக்கு 15 மைல் தொலைவில் 6,200 ராத்தல் எடையுள்ளதும், ரூ 350 மதிப்புள்ளதுமான 9-சுறா மீன்கள் பிடிக்கப்பட்டன. சர்வதேச உணவு விவசாய ஸ்தாபனத்திடமிருந்து பெற்ற டேனிஷ் கப்பல் இதற்குப் பயன்பட்டதாம். 12 அடி நீளமுள்ள இச்சுறாமீன்களில் 450 ராத்தல் எடையுள்ள ஈரல் எடுக்கப்பட்டது.

★

சாந்திநிகேதன் :

விசுவ பாரதி பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் கவுன்சில் கூட்டம் நடைபெற்றபோது, கழகத் துணை வேந்தர் தன் சொந்த சம்பளத்திலிருந்து மாதம் ரூ 250 மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிப்பதாய் கூறினார்.

★

கல்கத்தா :

பிச்சைக்காரர்களுக்குக் காசுகளை எறிந்து அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து அதைப் பொறுக்க முயற்சிக்கும்போது புகைப்படம் எடுத்த அமெரிக்கர்களை சில இளைஞர்கள் கட்டாயப்படுத்தி புகைப்பட பிலிம்களைப் பறித்துக் கொண்டனர். பிலிம், போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

★

காரைக்கால் :

பிரெஞ்சுப் போலீசார், இளைஞர் காங்கிரஸ் சத்தியாக்கிரகிகளின் வீடுகளுக்குச் சென்று உறவினர்களையும், அனுதாபிகளையும் பயமுறுத்தி வருகின்றனர் பெண்களை இழிவாகப் பேசுகின்றனர் என்று திருமலைராயன் பட்டின இளைஞர் காங்கிரஸ் தோழர் லோகநாதன் அறிக்கை ஒன்றில் கூறுகிறார்.

★

புதுச்சேரி :

சென்றவாரம் புதுவை கடற்கரை ஓரத்திலிருந்து அகற்றப்பட்ட ரேடியோவை தற்போது மீண்டும் கடற்கரையிலேயே பொருத்தப்பட்டது—முன்னைய இடத்திலிருந்து 90 கஜ தூரத்தில இப்போது பொருத்தியுள்ளனர்.

★

கோட்டயம் :

திருவாங்கூர் பார்லர்மெண்டரி விழாவில் பேசும்போது நாட்டிலுள்ள பஞ்சாயத்து முறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று உலியுதத்தி திரு-கொச்சி முதன் மந்திரி பட்டம் தாணுப்பிள்ளை கூறினார். விழாவிற்கு சர்தார் கே. எம். பணிக்கர் தலைமை வகித்தார்.

★

புதுடில்லி :

காலஞ்சென்ற சுபாஷ்சந்திர போசின் குமாரி அனிதா போசுக்கு இந்திய தேசிய இராணுவ நிதியிலிருந்து 2 லட்சம் ரூபாய் கொண்ட டிரஸ்டு ஏற்படுத்தி அதன் மூலம் கிடைக்கும் வட்டி வருவாயை அளிப்பது என்று முடிவு செய்துள்ளனர். அனிதாபோசுக்கு 21 வயதானதும் நிதி முழுமையும் அவரிடமே தரப்படும்.

★

லால்குடி

திருச்சி மாவட்ட அதிகாரி திரு. என். எஸ். குரேஷி அவர்கள் முயற்சியால் லால்குடியில் விவசாயிகள் — மிராசுதாரர்களிடையே சில நாட்களாக இருந்த தகராறு தீர்ந்து போயிற்று என்று தெரிகிறது.

★

சிம்லா :

இந்திய உபகண்ட ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத் கோடைகால வாசஸ்தலமாகிய சிம்லாவுக்குச் சென்றார். அவருக்கு புகை வண்டி நிலையத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

★

காட்மண்ட் :

நேபாள ஜூலைகளை அரசாங்கம் பின்பற்றி வருவதை பகிஷ்கரிப்பது என்று நேபாளத்தின் முக்கிய எதிர்க் கட்சியான நேபாள காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது; நேபாளத்தில் தேர்தல் நடைபெறுவதாலும் 'காபந்து' சர்க்கார் நடப்பதாகவும், அதிகாரமில்லாத இச்சபையில் அங்கம் வகிப்பது பயனற்றது, என்றும் காட்மண்டில் நடைபெற்ற காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மதுவிலக்கை எதிர்த்து......

ஆந்திராவில் சட்டமறுப்பு மும்முரமாகுமாம் !

'ராமமூர்த்தி கமிட்டியின் சிபார்சுகளை அரசாங்கம் அமுல் செய்யவில்லை என்றால், கிருஷ்ணா ஜில்லாவில் நடைபெறும், மூன்றுநாள் மாமேறிகளின் சட்ட மறுப்பு தொடர்ந்து நடத்தப்படுவதுடன், மே 27-ந் தேதி முதல் சட்ட மறுப்பு மாநிலமெங்கும் பரவலாக நடத்தப்படும்"

என்று ஆந்திர சட்டசபை கிருஷிக் லோக் கட்சியின் தலைவரான தோழர் ஜி லட்சண்ணு, எம எல். ஏ பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

கள் இறக்குவோர், ஈச்சை, தென்னை, முதலிய மரங்களிலிருந்து கள் இறக்குவதற்கு வகை செய்கிற முறையில் மதுவிலக்குச் சட்டங்கள் திருத்தப்படும் வரையில் சட்டமறுப்பு தொடர்ந்து நடைபெறும் என்றும் அவர் அறிவித்தார்.

இதுவரையில் 108 பேர் கைது செய்யப்பட்டு, மதுவிலக்குச் சட்டங்களை மீறியதாகத் தண்டிக்கப்பட்டு, ராஜமகேந்திரத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, குப்பு நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.